பக்கங்கள்:-பத்து

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

ராம்கோ சிமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 17 | வியாழக்கிழமை | (02.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 258

## சமாதானத் தூதுவர் சோல்ஹெய்ம் விரைவில் இலங்கை வருகிறார்

(கொழும்பு)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சோல்ஹெய்ம் இந்த மாத நடுப் பகுதியில் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லண்டனில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பால சிங்கத்துடன் இவர் சந்திப்பை மேற்கொண்டிருந்தார். சுமார் இரண்டு மணிநேரம் இடம்பெற்ற இச் சந்திப்பில் தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீள ஆரம்பிப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இச் சந்திப்பின் விபரங்கள் மற்றும் சமாதான முயற்சிகளை மீள ஆரம்பிப்பது

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக்குழுத் தலைவர் நாளை நோர்வே செல்கின்றார்

(கொழும்பு)

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் ரொன் பியூறு ஹெவ்டே நாளை நோர்வேக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நோர்வேயின் வெளிவிவகார அமைச்சரையும், ஏனைய நோர்வே அனுசரணையாளர் களையும் சந்திக்கும் இவர் தற்போதைய கண்காணிப்பு நிலைப்பாடுகள் மற்றும் சமா தான முன்னெடுப்புக்கள், யுத்தநிறுத்த நிலைப்பாடுகள் போன்ற பல்வேறு நிலைமை கள் குறித்து அவர்களோடு ஆலோசிக்கவுள்ளார்.

அண்மைக்காலமாக கிழக்கில் இடம்பெற்றுவரும் படுகொலைகள் அரசாங்கப் படை

(10 ஆம் பக்கம் பார்க்க)

# இனப்பிரச்சினைக்கு நிரந்தர தீர்வுகாண

# சுய அரசியல் இலாபத்தைக் கைவிட்டு கட்சித் தலைவர்கள் ஒன்றுபடவேண்டும்!

### கண்டி மல்வத்த மகாநாயக்கர் வேண்டுகோள்

(கண்டி)

**இலங்கையின் இனப்பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வு ஒன்றி னைக் காண்பதற்கு நாட்டில் உள்ள அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும் தமது குறுகிய சுயலாபத்தை கைவிட்டு பொது இணக் கப்பாடு ஒன்றிற்கு வரவேண்டும் என்று கண்டி மல்வத்த மகாநாயக் கர் திம்பிட்டுவாவே சிறி சுமங்கல தேரர் தெரிவித்துள்ளார்.**

நேற்றுக் காலை கண்டி மல்வத்த மகா நாயக்கரைச் சந்தித்த முன்னாள் அமைச் சர் டாக்டர் ஜயலத் ஜெயவர்த்தனாவிடம் அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கண்டி மல்வத்த மகாநாயக்க தேரர் இனப்பிரச்சினைக்கான தீர்வு சம்பந்தமாக மேலும் தெரிவித்திருப்பதாவது,

மிக நீண்ட காலமாக தீர்த்துவைக்கப் படாமல் உள்ள இனப்பிரச்சினைக்கு நிரந் தரத் தீர்வையும் உறுதியான சமாதானத் தையும் காணாது விட்டால் இலங்கையின்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகரன் எம்.பி இன்று வன்னி விஜயம்

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணி தலை வரும் நுவரேலியா மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினருமான பெ. சந்திரசேகரன் இன்று வியாழக்கிழமை வன்னிக்கு விஜயம் செய்ய வுள்ளார்.

இவர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச் செல்வனைச் சந்தித்து தற்பொழுது ஏற் பட்டுள்ள அரசியல் நெருக்கடி குறித்துக் கலந்துரையாடவுள்ளார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்தவர் பலி

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஏறாவூரில் நேற்று முன் தினம் இரவு இடம்பெற்ற துப்பாக்கிச் சூட் டுச் சம்பவத்தில் காயமடைந்த நபர் நேற் றிரவு மரணமானார்.

ஏறாவூர் மிச்சி நகர்ப் பகுதியிள்ள வீடொன்றினுள் நள்ளிரவு புகுந்த இனந் தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட துப் பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஒருவர் காய மடைந்து மட்டக்களப்பு வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

(10. ஆம் பக்கம் பார்க்க)

## சிறுவனின் சாதுரியத்தால் கடத்தல் முயற்சி முறியடிப்பு

### வடமராட்சியில் மீண்டும் வெள்ளை வான் பீதி

(துன்னாலை)

தனியார் கல்வி நிலையம் சென்ற சிறு வனை வெள்ளை வானில் கடத்த மேற் கொண்ட முயற்சி சிறுவனின் சாதுரியத்தால் முறியடிக்கப்பட்டது.

சம்பவம் பற்றி தெரியவருவதாவது,

வடமராட்சி மாலு சந்தியில் உள்ள தனியார் கல்வி நிறுவனம் ஒன்றில் 7 ஆம் ஆண்டில் கல்வி கற்கும் குருஸ்னானந்தன் குணசீலன் (வயது 12) என்னும் சிறுவன் நேற்று முன்தினம் 3 மணியளவில் குறிப் பிட்ட கல்வி நிறுவனத்திற்கு சென்றுகொண் டிருந்த போது தெருமுடி மடத்தடிப் பகுதி யில் வெள்ளை வானில் வந்த சிலர் சிறுவ னைக் கடத்திச் சென்றனர். பின்னர் வானில் வைத்து குளிசை ஒன்றைக் கொடுத்து அதனை குடிக்குமாறு வற்புறுத்தியுள்ளனர்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சுவார்த்தையை உடன் ஆரம்பிக்கவும்

### பிரான்ஸ் தூதுவர் வற்புறுத்து

(கொழும்பு)

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைகளை உடனடியாக ஆரம் பிக்க வேண்டும் என்று அரசாங்கத்தை தாம் வலியுறுத்தப்போவதாக பிரான்ஸ் நாட்டின் பிரதி உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் கொழும்பில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் களாகிய யோசப் பரராஜசிங்கம் மற்றும் கஜேந்திரகுமார் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியபோதே அவர் இவ் வாறு தெரிவித்துள்ளார்.

இச் சந்திப்பில் கூட்டமைப்பின். பாராளு மன்ற உறுப்பினர் நாட்டில் இன்று இடம் பெற்றுவரும் கொலைகளை தமிழீழ விடு தலைப் புலிகள் மாத்திரம் தான் செய்கிறார் கள் என்று அரசாங்கம் கூறும் கூற்றை

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு

(கிளிநொச்சி)

முல்லைத்தீவு மாத்தளன் கடற்பகுதி யில் கடற் தொழிலில் ஈடுபட்டுக்கொண் டிருந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்

(10 ஆம் பக்கம் பார்க்க)

அன்பு மாணவர்களே!

உள்ளே!

க.பொ.த (சா/த) பரீட்சை மாதிரி வினாத்தாள்

தமிழ் மொழியும் இலக்கியமும் - I

ஆக்கம் ம. இரங்கநாதன் (ஆசிரியர்)

## குருநகர்ப் பகுதியில் பதற்ற நிலை கடைகள் பூட்டு; சந்தை கூடவில்லை

### ஜஸ்ரின் அடிகளார் பி.பி.ஸிக்குத் தகவல்

(நமது நிருபர்)

கல்முனைக் கடலில் கடந்த 30ம் திகதி இடம்பெற்ற குருநகர் மீனவர்கள் மீதான துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தை அடுத்து குருநகர் பகுதிகளில் பதற்றம் நிலவுவதுடன், கடைகள் எல்லாம் பூட்டப்பட்டு சந்தையும் மூடப்பட்டுள்ள நிலையில், மக்கள் ஆத்தி ரமடைந்தும் காணப்படுவதாக புனித யாகப்பர் ஆலய துணைப் பங்குத்தந்தை வணபிதா ஜஸ்ரின் அடிகளார் லண்டன் பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

அப் பேட்டியில் வணபிதா ஜஸ்ரின் அடிகளார் மேலும் தெரிவித்திருப்பதாவது,

கல்முனைக் கடலில் இடம்பெற்ற சூட்டுச் சம்பவம் தொடர்பாக பேசி முடிவுக்குக் கொண்டுவர குருநகர்ப் பகுதி மக்கள் தமிழீழ விடுதலைப் புலிகளினால் அழைக்கப்பட்டு இருந் தார்கள். இக் கூட்டத்திற்கு அருட் தந்தை ஜெயசேகரம் அடிகளார் ஒழுங்கு செய்திருந்தார்.

இக் கூட்டத்தில் குருநகர்ப் பகுதி மக்கள் ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கஞ்சா வைத்திருந்தவருக்கு ஆறுமாதச் சிறைத் தண்டனை

(யாழ்ப்பாணம்)

சுண்டுக்குளிப் பகுதியில் 35 கிராம் கஞ்சா வைத்திருந்த நபர் ஒருவர் மதுவரித் திணைக்கள அதிகாரிகளால் நேற்று பிடிக் கப்பட்டார்.

'கனாபிஸ் சற்றேவா' என்ற தாவரத்தின் பகுதிகளைக் கொண்டதாக தயாரிக்கப்பட்ட இக் கஞ்சாவை மதுவரித் திணைக்கள அதிகாரிகள் கைப்பற்றினர்.

பிடிக்கப்பட்ட நபர் மதுவரித் திணைக் கள அதிகாரிகளால் யாழ். மாவட்ட நீதி மன்றில் மேலதிக நீதிவான் திருமதி சிறி நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர்படுத்தப் பட்டபோது இவருக்கு 6 மாதகால சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

(ச-19-5)

# ஈராக்கில் கடத்தப்பட்ட 12நேபாளிகளும் தலை துண்டிக்கப்பட்டுப் படுகொலை

(ஈராக்)

ஈராக்கில் கடத்திச் செல்லப்பட்ட 12 நேபாள நாட்டினர் தீவிர




வாதிகளால் தலைவெட்டிக் கொடூரமாகப்படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

ஈராக்கில் அமெரிக்கப்படையினருக்கு உதவியதாகக் கூறி அண்மையில் 12 நேபாள நாட்டினரை தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் கடத்திச் சென்றனர்.

இவர்கள் 12 பேரும் தலை வெட்டியும் துப்பாக்கியால் சுடப்பட்டும் படுகொலை செய்யப்பட்டதாகத் தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

இதேவேளை, இவர்களில் ஒருவர் தலை துண்டிக்கப்பட்டும் மற்றவர்கள் கழுத்தை அறுத்தும் கொலை செய்யப்பட்டதாகத் தீவிரவாதிகளின் இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.


ஈராக்கில் அமெரிக்காவுடன் சேர்ந்து சவுதி, குவைத் போன்ற நாடுகளும் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. இந்த நாடுகளைச் சேர்ந்த நிறுவனங்களும் ஏராளமான மறுசீரமைப்புப் பணிகளை மேற்கொண்டு வருகின்றன. இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும், ஈராக் தீவிரவாதிகள், இந் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களை கடத்திச்சென்று கொடூரமாகக் கொன்று வருகின்றனர்.

ஜோர்தான், லெபனான், எகிப்து உள்ளிட்ட நாடுகளைச் சேர்ந்தவர்கள் அடுத்தடுத்து கடத்திச் செல்லப்பட்டுக் கொல்லப்பட்டனர்.இதே போல இந்தியர்கள் 3பேரும் நோபாளத்தைச் சேர்ந்த 12பேரும் தீவிரவாதிகளால் கடத்தப்பட்டனர். கடத்தப்பட்ட இந்தியர்களை மீட்க மத்திய அரசு தொடர்ந்தும் முயற்சி மேற்கொண்டு வருகிறது.


இந்நிலையில், கடத்தப்பட்ட நேபாள நாட்டினர் 12 பேரையும் தீவிரவாதிகள் தலையை வெட்டிக் கொன்றுவிட்டதாக அல்-குவைதா ஆதரவு இஸ்லாமிய ஊடகம் ஒன்று செய்திவெளியிட்டுள்ளது.

அமெரிக்காவுக்கு ஆதரவாகப் பணியாற்றி வந்ததால் இவர்கள் கொலை செய்யப்பட்டனர் என்று அந்த ஊடகம் விடுத்துள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

தற்போது ஈராக்கில் நிவாரணப் பணிகளல் ஈடுபட்டுள்ள அமெரிக்கா தலைமையிலான படையில் நோபாளம் பஙகேற்கவில்லை. இருப்பி னும், கூட நேபாள நாட்டைச் சேர்ந்த 12 பேர் கொல்லப்பட்ட சம்பவம் பெரும பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. (து,ற)



ஈராக்கைவிட்டு அமெரிக்கா வெளியேற வேண்டும் என்று கேட்பதற்காகத் தங்களுக்குள் ஆலோசனை நடத்திய (இடமிருந்து) பிரெஞ்சு அதிபர் ஜாக்ஸ் சிராக், ரஷிய அதிபர் விளாடிமிர் புடின், ஜேர்மன் பிரதமர் ஜெரராடு சுஷிரோடர், ரஷியாவின் கருங்கடல் பகுதியில் உள்ள கோச்சி என்ற கடல் வாசஸ்தலத்தில் இத் தலைவர்கள் கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்தனர்.



பறவை போன்ற தோற்றத்தில் தக்காளி பெங்களூர் மார்க்கெட்டில் சோத்ரிபுரத்தைச் சேர்ந்த ஜான் இம்மானுவேல் காய்கறிகள் வாங்கிய போது இந்தப் பறவைத் தக்காளி கிடைத்தது.

## WORLD NEWS உலக தரிசனம்

# பாக். அதிபர் - இந்தியப் பிரதமர் நியு,யோர்க்கில் 22 ஆம் திகதி சந்திப்பு

(இஸ்லாமபாத்)

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத்தொடரை முன்னிட்டு, நியூயோர்க்கில் எதிர்வரும் 22 ஆம் திகதி பாகிஸ்தான் அதிபர் பர்வேஸ் முஷாரப்பை இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங் சந்தித்துப் பேசவுள்ளார்.

இந்தச் சந்திப்புக்கான திகதி தற்காலிகமாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாக பாகிஸ்தான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்தியா - பாகிஸ்தான் இடையே இது குறித்து உள்துறைச் செயலாளர்கள் மட்டத்தில் பேச்சுவார்த்தை நடந்துள்ளது. இதையடுத்து, விரைவில் இருநாட்டு வெளியுறவு அமைச்சர்களும் எதிர்வரும் 5,6 ஆம் திகதிகளில் பேச்சுவார்த்தை நடாத்தவுள்ளனர்.

இந்த நிலையில், இந்தப் பேச்சுவார்த்தையின் முன்னேற்றம் பற்றியும், காஷ்மீர் பிரச்சினை தொடர்பாகவும் விவாதிப்பதற்காக இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்திக்கப் பாகிஸ்தான் அதிபர் முஷாரப் திட்டமிட்டுள்ளார்.

பிரதமராக மன்மோகன் சிங் பதவியேற்ற பிறகு, முஷாரப்பைச் சந்திக்கவுள்ளமை இதுவே முதல் முறையாகும். பாகிஸ்தான் பிரதமராக செளகத் அஜீஸ் பதவியேற்றுள்ள நிலையில் அவருக்கு பிரதமர் மன்மோகன் சிங் தனது வாழ்த்துக்களைக் கூறியுள்ளார்.

செனகத் அஜீஸ் பிரதமராகி இருக்கும் சூழ்நிலையில், மன்மோகன் சிங்கும், முஷாரப்பும் சந்திக்கிறார்கள். இந்தச் சந்திப்பு பலனளிக்கக் கூடியதாக இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. (ற)

# பா.ஜ.க.வின் பாசிஸப் போக்கை விளக்கச் சென்னையில் கூட்டம்

(சென்னை)

நாடாளுமன்றத்தை நடக்க விடாமல் குழப்பம் விளைவிக்கும் பா.ஜ.கட்சியின் நடவடிக்கைகளை மக்களுக்கு விளக்கிட வரும் 7ஆம் திகதி சென்னையில் பொதுக் கூட்டமொன்றை நடத்துவதெனத் தி.மு.க.தலைமையிலான ஜனநாயக முற்போக்குக் கூட்டணி முடிவு செய்துள்ளது.

சென்னை அண்ணா அறிவாலயத்தில் தி.மு.க.தலைவர் கருணாநிதி தலைமையில் நடைபெற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணித் தலைவர்கள் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்களை விளக்கிச் செய்தியாளர்களுக்குக் கருணாநிதி பேட்டியளித்தார்.

அப்போது, தமிழ் நாட்டுக்குத் தேவையான திட்டங்கள் போன்றவை குறித்து மத்திய அரசிடம் எடுத்துரைக்கவும் அதற்கான செயல்முறைகள் பற்றி விவாதிக்கவும் வரும் 7 ஆம் திகதி ஜனநாயகக் கூட்டணி எம்.பி.கள் மற்றும் அமைச்சர்கள் கூட்டம் சென்னையில் நடைபெறுமென்று அவர் தெரிவித்தார்.


மேலும் பா.ஜ.க.கூட்டணியின் பாசிஸப் போக்கை மக்களுக்கு விளக்கிட சென்னையில் 7 ஆம் திகதி பொதுக்கூட்டம் நடத்தப்படுமென்றும் அவர் தெரிவித்தார். (து)

## மர்ம நபர்களால் தொழிலதிபர் சுட்டுக் கொலை

தர்மபுரி மாவட்டம் புறக்கூர் அருகே தொழிலதிபர் ஒருவர் மர்ம நபர்களால் சுடப்பட்டுச் சிகிச்சை பயனின்றி மரணமடைந்துள்ளார்.

புறக்கூரைச் சேர்ந்த லொறிகள் உரிமையாளரான மாணிக்கம் என்பவர் தமது வீட்டின் உட்புறமுள்ள தோட்டத்தில் தூங்கிக் கொண்டிருந்த போது மர்மநபர்கள் சிலர் அவரை நாட்டுத் துப்பாக்கியால் சுட்டுள்ளனர். அவர் எழுப்பிய அலறல் சததம் கேட்டு அவரது மணைவி பிள்ளைகள் வந்து பார்த்த போது அவர் இரத்த வெள்ளத்தில் கிடப்பதைக்கண்டனர். தனியார் மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்ட மாணிக்கம் சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார்.

தர்மபுரிப் பகுதியில் பதுங்கியுள்ள நக்சலைட்டுக்கள் இத் தாக்குதலில் ஈடுபட்டார்களா என்பது குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகிறார்கள். (து)




## இந்தியச் செய்திகள்



கேரளாவின் முக்கிய பண்டிகையான ஓணம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. ஓணம் பண்டிகையையொட்டி கேரள மக்கள் தங்களது வீடுகளில் பூக்கோலம் இட்டு, பல்வேறு வகையான உணவுப் பண்டங்கள் செய்து, புத்தாடை அணிந்து கொண்டாடினர். பள்ளியொன்றில் பூக்கோலத்துக்கு நடுவே விளக்கேற்றி ஓணத்தை கொண்டாடிய காட்சி.

# ஐ.நா.கூட்டத்தில் உரையாற்ற மன்மோகன் சிங் தயார்

ஐ.நா. பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றுவதற்காகப் பிரதமர் மன்மோகன் சிங் வரும் 19 ஆம் திகதி அமெரிக்கா புறப்படுகிறார். செல்லும் வழியில் லண்டனில் பிரிட்டிஷ் பிரதமர் ரொனிபிளேயரைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவார்.

21 ஆம் திகதி நியுயோர்க்கில் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ புஷைை மன்மோகன் சிங் சந்திப்பார். அப்போது ஈராக் நிலைமை, இஸ்ரேல்-பாலஸ்தீன பிரச்சினை, இந்திய-பாகிஸ்தான் தொடர்புகள் குறித்தும புஷ்ஷுடன் பேசுவார். மறுநாள் ஐ.நா.பொதுச் சபையில் பங்கேற்க வரும் பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷ்ரப்பையும் மன்மோகன் சிங் சந்திப்பாரெனத் தெரிகிறது.

23 ஆம் திகதி ஐ.நா.பொதுச் சபையில் அவர் உரையாற்றுகிறாா. அப்போது ஐ.நா. பாதுகாப்புக் கவுனஸிலில் இந்தியாவை நிரந்தர உறுப்பினராக்க வேண்டுமென அவர் வலியுறுத்தவிருக்கிறார்.

எட்டுநாள் பயணத்தை முடித்துக் கொண்டு பிரதமர் மன்மோகன் சிங் 26 ஆம்திகதி இந்தியா திரும்புவார்.(து)

# கோவில் கூரை இடிந்து 6 பேர் பலி

கோவை அருகே கோவில் கட்டடக் கூரை இடிந்து விழ்ந்ததில் 6 பேர் இறந்த சம்பவம் தொடர்பாக பொறியியலாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கோவை - பொன்னாச்சி பாதையிலுள்ள இக் கோவிலில் கொங்கிறீற் கூரை அமைக்கும் பணி நடைபெற்ற போது தூண்கள் சரிந்து கூரையின் ஒருபகுதி கீழே விழுந்ததில் கூலித் தொழிலாளர்கள் 6 பேர் உயிரிழந்தனர். 20க்கும மேற்பட்டோர் காயங்களுடன்மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் தொடர்பாக மொத்தம் 15 பேர் மீது பொலிஸார் வழக்குப் பதிவு செய்துள்ளனர். (து)

# ஐந்தாவது தொடரையும் இலங்கை அணி வென்றது

இலங்கை தென்னாபிரிக்க அணிகளுக்கிடையில் நடைபெற்ற ஐந்தாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெற் போட்டியில் இலங்கை அணி 49ஓட்டங்களால் வெற்றிபெற்றுள்ளது. இதன் மூலம்






ஒருநாள் தொடரை 5:0என்ற அடிப்படையில் இலங்கை வென்றுள்ளது. முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி 50ஓவர்கள் முடிவில் 8விக்கெற்றுக்களை இழந்து 308ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் சனத் ஜெயசூரியா 79ஓட்டங்களையும் குமார் சங்ககார 72ஓட்டங்களையும், சமன் ஜெயந்த் 51ஓட்டங்களையும் பெற்றனர்.






பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பில் லங்வெல்ட் .3 விக்கெற்றினையும் ஷோன்பொலக் 2 விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணியில் 48.1ஓவரில் சகல விக்கெற்றினையும் இழந்து 259ஓட்டங்களைப் பெற்று தோல்வியடைந்தது.

துடுப்பாட்டத்தில் ஜக்கலிஸ் 101ஓட்டங்களையும், றூடொல்வ் 48ஓட்டங்களையும் பெற்றனர்.

உப்புள் சந்தன 61ஓட்டங்களுக்கு 5விக்கெற்றினையும் வீழ்த்தினார்.

அணித்தலைவர் மாவன் அத்தப்பத்து இல்லாமல் நேற்றைய போட்டியில் களமிறங்கிய இலங்கையணி வெற்றி பெற்றமை குறிப்பிடத்தக்கது.

(ச-121)

# மாரத்தான் முடிவை மாற்றமுடியாது

## சர்வதேச தடகளக் கூட்டமைப்பு அறிவிப்பு

எதென்ஸ் ஒலிம்பிக் மாரத்தான் முடிவை மாற்ற இயலாது என சர்வதேச தடகளக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எதெனஸ ஒலமபககல கடைசப போடடியாக ஆணகளுககான மாரததான ஓடடம கடநத 29ல நடநதது. இதல பரேசல வரா வாணடா லயலமா முதல நபராக ஓடிககொணடிருநதா. அபபோது கரேகக பாரமபாய உடை அணிந்து ஒருவர் இடையில் புகுந்து லிமாவைப் பிடித்து தள்ளியதோடு தாக்கினார். இந்தச் சம்பவத்தால் நிலைகுனைந்துபோன லிமா மூன்றாவது இடத்தையே பிடிக்க முடிந்தது.

இவரைத தாககயவா அயாலாநதைச சோநத முனனாள பாதாயாா காானலயஸ ஹோரன எனறு தொய வந்தது. மனநிலை சரியில்லாத இவருக்கு ஒரு ஆண்டு ஜெயில் தண்டனை வழங்கப்பட்டது. பின்னர் தண்டனை நிறுத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையே மாரத்தான் வீரர்களுக்கு எதென்ஸ் ஒலிம்பிக் கமிட்டியினர் போதிய பாதுகாப்பு அளிக்க வலலை எனறு பரேசல குறறம சாடடியுளளது. மாரததான போடடியன முடிவை எதாதது அவ சாவதேச விளையாட்டு நடுவர் மன்றத்திடம் முறைப்பாடு செய்துள்ளது.

இது தொடாபாக சாவதேச ஒலமபக கமபடியன செயத தொடாபாளா ஒருவா கூ கையல, இநதச சமபவம மிகுந்த கவலை அளிக்கிறது. ஒலிம்பிக் உணர்வுகளை மதித்துச் செயற்பட்ட லிமாவுக்கு உயரிய கௌரவம் அளிக்கபபட்டது. நிறைவு விழாவின் போது இவருக்கு நவீன ஒலிம்பிக்கின் தந்தையான டி கூபர்ட்டின் நினைவுப் பதக்கம் அளித்து உற்சாகப்படுத்தினோம். மாரத்தான் முடிவை மாற்றுவது கடினம் என்றார்.

சர்வதேச தடகளக் கூட்டமைப்பும் மாரத்தான் முடிவை மாற்றி அமைக்க வாய்ப்பில்லை என்று விளக்கம் அளித்துள்ளது. (ற)



அமெரிக்க ஓபன் டெனிஸ் போட்டியில் முதல் சுற்றில் அன்ட்ரு அகாஸி தன்னை எதிர்கொண்ட றொபி ஹின்பிரீயை வெற்றி கொண்டார். அவர் போட்டியின் போது தனது திறமையை வெளிப் படுத்தும் காட்சி

## கர்ப்பிணியைத்தாக்கிய அமெரிக்கவீரர்கைது

கர்ப்பிணிப் பெண்ணைத் தாக்கிய அமெரிக்க ஒலிம்பிக் வீரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டி நிறைவு விழா முடிந்ததும் அமெரிக்க அணியைச் சேர்ந்த வீரர்கள் சிலர், தங்கள் வெற்றியைக் கொண்டாடுவதற்காக உற்சாக பானம் அருந்தினர்.

போதை தலைக்கேறிய நிலையில் வீரர் ஒருவர் அங்கிருந்த கர்ப்பிணிப் பெண்ணைத் தாக்கியிருக்கிறார். பொலிஸாரிடம் அந்தப் பெண் தெரிவித்த புகாரை அடுத்து அமெரிக்க வீரர் கைதுசெய்யப்பட்டார்.

அவரிடம் விசாரணை நடைபெற்று வருகிறது. அந்த வீரரின் பெயரைத் தெரிவிக்க பொலிஸார் மறுத்து விட்டனர்.

(ற)



பீஜிங்: ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் சாதித்த சீன வீரர், வீராங்கனைகள் நேற்று பீஜிங் திரும்பினர். அவர்களுக்கு விமான நிலையத்தில் இராணுவ பாண்ட் வாத்தியங்கள் முழங்க சிவப்பு கம்பள வரவேற்பு அளிக்கப்பட்டது.

# சர்வதேச போட்டிகளிலிருந்து டோட் மார்டின் ஓய்வு

அமெரிக்க டென்னிஸ் வீரர் டோட் மார்ட்டின் சர்வதேசப் பேட்டிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

நியூயோர்க்கில் கடந்த திங்கட்கிழமை தொடங்கிய யூ.எஸ்.திறந்த டென்னிஸ் போட்டியின் முதல் சுற்றில் அவர் தோல்வியடைந்தார்.

அதன்பிறகு ஓய்வுபெறுவதாக அறிவித்தார். 34வயதாகும் மார்ட்டின் கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் பிரான்ஸின் .·.பேப்ரிஸ் சாண்டரோவிடம் 4:6,6:4,6:4,7:7என்ற கணக்கில் தோல்வியடைந்தார் மாட்டின்.

1999 யு.எஸ்.திறந்த இறுதிப் போட்டியில் சகநாட்டு வீரர் ஆந்தரே அகஸ்ஸிடம் தோல்வியடைந்து இவர் 2ஆவது இடத்தைப் பிடித்தார். 1994 ஆவுஸதிரேலிய போட்டியில் சக நாட்டு வீரர் பீட் சாம்பிராஸிடம் தோல்யடைந்து 2-வது இடத்தைப் பிடித்தார்.

இதைத் தவிர 4 முறை கிராண்ட்ஸ்லாம் பாட்டிகளில் அரைஇறுதி வரை அவர் தகுதிபெற்றுள்ளார். 1995இல் டேவிஸ் கோப்பையை வென்ற அமெரிக்க அணியிலும் இவர் இடம்பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ற)




படகோட்டப்போட்டியில் தங்கப்பதக்கத்தை வென்றெடுத்த இங்கி லாந்து வீரர் மத்தியு, பின்சென்ற், இங்கிலாந்து அணி, இங்கிலாந்து திரும்பும் பயணத்தை மேற்கொண்ட போது பத்திரிகையார்களுக்குக் கையசைத்து மகிழ்ச்சி தெரிவிக்கிறார்.

# விளையாட்டுச் செய்திகள்

## இந்திய அணிக்கு மீண்டும் புரூஸ்ரீட பயிற்சியளிக்கின்றார்

இந்திய கிரிக்கெற் அணியின் வேகப்பந்து வீச்சாளர்களுக்கு அவுஸ்திரேலிய முன்னாள் வீரர் புருஸ் ரீட் மீண்டும் பயிற்சி அளித்து வருகிறார்.


நோட்வெஸ்ட் கிண்ண போட்டிக்கான இந்திய பந்து வீச்சாளர்களுக்கு அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர் புருஸ் ரீட் கடந்த 2 நாட்களாக ஆலோசனைகளையும் வழங்கியுள்ளார்.

ஐ.சி.சி.போட்டியின்போதும் அவர் இந்தியப் பந்து வீச்சாளர்களுக்கு ஆலோசனை வழங்கவுள்ளார்.

கடந்த அவுஸ்திரேலிய பந்து வீச்சாளர்களுக்கு புருஸ் ரீட் பயிற்சி அளித்தமை குறிப்பிடத்தக்கது.

(ற-க)

# வியாழ மாற்றம்



(நேற்றைய தொடர்ச்சி)

## மகரம்



24.03.2005
முதல்
07.05.2005
வரை

குடும்பத்தில் மகிழ்ச்சி பொங்கும். விவசாயம் செய்பவர்கள் தானிய வியாபாரம் செய்பவர்களுக்கு பெருத்த தன யோகம் உள்ளகாலம். பூமி வாங்குவது திடீர் நல்லவரவைப் பெறுவதும் இப்போது உண்டாகும். கணவன், மனைவி உறவு இனிமையானதே. மாணவ, மாணவியர்களுககு கல்வி சிறப்பும் பாராட்டும் உடையகாலமிது.மேலும் அசையாப் பொருள் சேர்க்கையை உண்டாக்கும். அரசாங்கத்தால் அனுகூலமான உத்திரவை எழுத்து மூலமாகப் பெறுவீர்கள். குடுமபத்தில் நாகரிகப் பொருட்களை வாங்குவது, வாகன சேர்க்கை கட்டிடம் பிரிவினர்களுக்கு இடமாற்ற பிரச்சினை நின்று விட்டது. மேல் மட்ட மனிதாகள மிகவும் தெளிவான சூழ் நிலையில் இருக்கினறனர். கடித வரவு கவர்ச்சியான செய்திகளைக கொண்டு வரும். அதன்படி செயல்படுவது ஆதாயம், அனுகூலமாக இருக்கும். கணவன், மனைவி உறவு முணு முணுப்பாக இருக்கும். 2ல் சனி உங்கள் தொழில் அடைககப்பட்டிருந்தது திறந்துவிட வழிசெய்பவனாக இருக்கிறான். கலைப் பிரிவு உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு தாமதப்பட்ட பிரச்சினைகளில் தீர்வுகாணும் காலமிது.

**அதிஷ்ட எண்கள்: 3, 6, 9**
**அனுகூல திக்கு: மேற்கு**
**07.05.2005 முதல் 20.06.2005**

குடும்பவகையில் மகிழ்சியான போக்கு தொடர்ந்து இருக்கும். தூரதேச கடிதம் வருவதும் அனுகூலமானதே. தொழில் வகையில் குறையாகவிட்டு வைத்த காரியங்களை முடிக்க இந்தமாதம் நல்ல வாய்ப்பை அளித்து இருக்கிறது. சத்துருககளுக்கு பலம்குறைவுதான். மேற்கு பிரயாணம் ஏற்கவேண்டி இருக்கிறது. குழநதைகள் ஆரோக்கிய செலவு, மருத்துவமனை போய்வருதல் போன்றவையும் உண்டாகும். கொடுககல் வாங்கல் தாராளமாக இல்லாவிட்டாலும் தேவைகள் பூர்த்தியாகிக் கொண்டே வரும். உங்களுக்கு கடந்த காலத்தில் ஏறபட்ட சிக்கலைத்தீர்த்து அனைத்து வழியிலும் அனுகூலமான சூழ்நிலை உருவாக்கி வந்துவிட்டது. கொடுக்கல் வாங்கலில் தாராளப் போக்கும், தொழில வகையில் மங்கிய நிலை அகன்று மாற்றம் விஷயங்கள் சில கடன் விஷயத்தில் நீங்கள் துரித கவனம் உடையவர்களாகவே இருக்கிறீர்கள்.

**அதிஷ்ட எண்கள்: 7,8,9**
**அனுகூல திக்கு: தென் கிழக்கு**
**20.06.2005 முதல் 03.0.005**

பிரயாணத்தைமுன்னிட்டு செய்யும் முஸ்தீபுகள் கடைசி நேரத்தில் தள்ளிப் போடப்படுவதும் உண்டாகும். எனினும் மனம் தளராது செயலில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பீர்கள். தனநிலை கடந்த காலத்தைவிட இந்தகாலம் ஒரு படி உயர்வுதான் எனபதில் சந்தேகமில்லை. ஏழரை சனி என்பதை மட்டும் மனதில் வைத்துக் கொண்டு தீயதையே எதிர் பார்த்து இருக்க வேண்டாம். குரு உங்கள் நண்பர் என்பதையும் நினைத்துப் பார்க்க வேண்டாம். நோய், கடனையும் தீவிரப்படுத்தக் கூடியவனல்ல. குடும்பத்து சுப விஷயங்கள் ஆரம்பத்தில் தடையும் பின்பு நன்முடிவாகவும் இருக்கும். குழந்தைகள் வகை மருத்துவச் செலவு இருக்கும். இந்த ராசி பெண்களுக்கு புது உடைகள்,அணிகள் சேர்க்கையும் உண்டாகும்.சிலர் புண்ணிய ஸ்தல பிரயாணத்தை மேற்கொள்வதும் கூட இருக்கின்றன. புகழ்பெற்ற மனிதர்கள் அரசியல் வாதிகள் சந்திப்பு உணடாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு நல்ல மாற்றம் இருக் கிறது. மேல் அதிகாரிகள் மூலம் கீழ் நிலையில் உள்ளவர்களுக்கும் இணக்கமான போக்கில் இருப்பர். இதனால் உங்களுக்கு எழுத்து வகை அனுகூலங்கள் இருக்கின்றன.

அமைதி போக்கும், அன்பு வழியில செல்லும் காலம். குழந்தைகள் தேக தக்கது. மற்றவருக்கு சிபாரிசு செய்வது உத்தியோக நன்மை புரிவதில் உங்கள் பங்கு பாராட்டக் கூடியது. பழைய கடன்கள்,வழக்குகள் குறைந்து தான் இருக்கின்றன. இப்படிப்பட்ட நேரத்தில் நீங்கள் சொத்து அல்லது தொழில் வழியில் எந்தவிதமான மாற்றமும் செய்யக் கூடாது. பழைய கடன்கள் வழக்கு பாதித்துவிடும் என பயம் வேண்டாம். கொடுக்கல், வாங்கலில் தாராளப் போக்கை பெற்றுவிடுவீர்கள். குடும் பத்திற்கு குறித்தபடி நாகாிக பொருள சேர்க்கை, புது உடைகள் வாங்குவது, நண்பர் உறவினர்களால் பாராட்டும் உண்டாகும். இப்போது ஆண்டுமுடியப் போகிறது உங்கள் தொழில் வழியை சற்று உற்றுப பாருங்கள். முன்னேற்றம் தெரியும் கடன் இருப்பதை மட்டும் பெரிதாக நினைக்க வேண்டாம். பழைய காரியங்கள் சில உங்களுக்கு ஆகாமல நின்றது அனுகூல கெதிக்கு திரும்பும். இப் போது அவசரப் பிரயாணங்கள் அடிக்கடி இருக்கின்றன. அரசியல மனிதர்கள் பெரிய மனிதர்கள் மூலம் பாராட்டை பெறக் கூடியவர் நீங்கள். தொழில் வழியில் தொய்வு இல்லை. ஆனால் அலைச்சல் அதிகம் இருப்பது மட்டுமே ஒரு குறையாக இருக்கலாம்.

கௌரவ இல்லத்து குரு அட்டமத்து சனியின் பலத்தையும் குறைத்து விடுவான் என்பதில் சந்தேகமில்லை. சிலர் தொழில் நிமித்தம் தூரதேச பிரயாணத்தை மேற்கொள்வதும் இருக்கலாம். மேலும் செய்தொழில் மூலமாக முன்னேற்றம் பெறும் காலமிது.உறவு வகை திருப்தியாக

# உங்களுக்கு எப்படி?

கட்டுவதும் குறிப்பிடத்தக்க நற்பலன்களாகும். செம்பொன் ஆபரண சேர்க்கை இந்த ராசிப் பெண்களுக்கு சித்திக்கும். சிவந்த நிறப்பொருட்களால் லாப மேன்மையும் இருக்கிறது. புத்திர,புத்திரியர்கள் வகையில் அவசர செலவுகள் இடம்பெறும் காலம். வெகுகாலமாக நினைததுக் கொணடிருந்த பூமி அல்லது வீடு போன்ற அசையாப் பொருளை இப்போது வாங்கநேரிடும். கடன் வழக்கும் உங்கள் பக்கம் தான இருக்கின்றன. இன்றும் குரு செவ்வாய் சாரம் வரா விட்டாலும். ஒப்பந்தத்தை செய்ய வைத்து விடும். சகோதர,சகோதரி வகையில சுபச்செலவுகள் இடம்பெறும். தேகஆரோக்கியம் தெளிவடைந்து விடும். தேடிப்போக வேண்டிய நண்பர் இப்போது உங்களை வந்த சந்திப்பார். தாய்வழி உறவில் சுபச்செலவுகள இடம் பெறுவது நிற்காது. பிரயாணம மூலம் பெருமை சேரும். உங்கள் தொழில வகையில் நல்ல முன்னேற்றத்தையும் இப்போது பெறு வீர்கள். தைரியம்தான் தேவை. உங்கள் சொல்லுக்கு அழகு சேர்க்கும் காலம். இடையிலே ஏற்பட்ட சோர்வுகள் நீங்கி சொத்து சுகம் உடையவர்களாக காட்சிய ளிப பர்கள். குடும்பத்திற்கு கலை கட்டிட சேர்க்கை, இக்கால முக்கிய பலனகளில் ஒன்றாகும். தொழில் கூட்டுமுயற்சி அடுத்து பலத்தை உங்களுக்கு அளித்து இருக்கின்றன. சிலர் புத்திர திருமணம் செய்வது, நாகரிகப் பொருள் உடைகள் சேருவது, பழைய ஆபரண சேர்க்கையும் உண்டாகும். பெண்கள் தேகஆரோக்கியமுமதிருப்தியாக இருக்கும். புத்திரர்,புத்திரியர்கள் கல்வி ஆரோக்கியம் கவர்ச்சிகரமாக இருக்கின்றன.வடக்கு,வடமேற்கு திக்கு நீண்ட பிரயாணத்திற்கு தயார் ஆகவேண்டி இருக்கிறது. வழக்கு பலம் குறைந்து இருக்கிறது. இடமாற்றம் உத்தேசம் கடந்து விட்டன.தூரத்துக் கடிதம்வருகிறது.உத்தியோகப் தும் கூடவரும். மேலும் நீங்கள் பூமி,வீடு சம்பந்தமான பிரச்சினைகளை முடிவுக்குக் கொண்டுவரலாம். சில ஒப்பந்தம் அல்லது எழுத்து வகையிலும் எதிர்பாராத நன்மைகள் உண்டாகும். விருந்து குடுமபத்திறகு பட்டாடை, சித்திர கலைப பொருட்கள் நன்மைகள் உண்டாகும். பழைய வாகனம் வாங்கவது புதுப்பித்தலும் உணடாகும். கடன், வழக்கு வகைகள் கட்டுப்பட்டே இருக்கும். குடும்பத்திற்கு நாகரிகப் பொருட்கள் சேர்க்கை பெண்களுக்கு நல்ல உணவு,உடைகள் சித்தி, சந்தானம் இல்லாதவர்களுக்கு புத்திரப் பேறு போன்றன கிட்டுவதும் குறிப்பாக செலவுகள் உண்டாகும். வீடு புதுப்பித்தல் வாகனம் புதுப்பித்தல் போன்றவழிகளில் செலவுகள் உண்டாகும்.தாய்வழி உறவில் நடக்கும சுபநிகழ்சசிகளில் கலந்து கொண்டு விருந்துண்பதும் உண்டாகும். சிலருக்கு இப்போது கடல் கடந்த பிரயாணம் தோன்றுவது அவசியமாகும்.சிலருக்கு அரசியல் கௌரவமும் உண்டாகும்.

தனம் கொடுக்கல் வாங்கல் பற்றிய கவலை வேண்டாம். இப்போதுதான் நீங்கள் வேகமுடையவர்களாக இருக்கிறீர்கள். எழுததுத்துறையில் உள்ளவர்களுக்கு இரு முக்கிய பிரயாணங்கள் இருக்கின்றன. இது சிலருக்கு அயல் நாட்டு பிரயாணமாகவும் இருக்கலாம். அவசியமான அவசர விளையாட்டு போட்டி போன்ற வழிகளில் இடை இடையே தனவரவு செய்து கொண்டே இருக்க வேண்டும். கணவன் மனைவி உறவு கண்ணியம் திருபதி உடையதாகவே இருக்கின்றன. முன்பு இருந்து வந்த கசப்பான சூழ்நிலை இப்போது இல்லை. குடும்பத்தில் உறவினா் வருகை அதிகமான செலவுகளை கொடுக்கத்தக்கது. ஆனால் உங்களுக்கு வருவாய் திருப்தியாக இல்லை. வழக்கு சுகம், கல்வி இவைகள் திருப்பியாக இருக்கின்றன. அப்போது கடன் பெறுவது முக்கிய குடும்பத் தேவைகளை பூர்த்தி செய்வதும் உண்டாகும். சகோதர,சகோதரி வகையில் புது உடை, ஆபரணச் செலவுகளை நீங்கள் ஏற்க வேண்டியிருக்கிறது. சிலர் கட்டிட வேலைகளை குறையாக நிறுத்த வேண்டிவரும். அரசாங்கத்தில் எழுத்து நடுப்பகுதியல தளர்ந்த உள்ளத்திற்கு ஒரு தனி தைரியம் உண்டாகும். விட்ட ஒரு குறையை முடிக்க அலைச்சல் சற்று அதிகமாக இருந்தாலும் அமைப்பாக அனைத்தும் செய்து முடிப்பீர்கள். விலகி இருந்தவர்கள் கூடிவருவர். தொழில் துறையில் உங்கள் செயல் மற்றவர்களால் பாராட்டப் பெறும. தன நிலையிலும் சற்று தளர்ச்சி இப்போது தான் ஏற்பட்டு இருக்கிறது. முன்பு விலகி இருந்தவர்கள் இப்போது உங்கள் நட்பை விரும்புவர். நாகரிக வாகன சேர்க்கை வளமான பூமிப் பொருள் சேர்க்கையும் உண்டாகும். குடும்பத்திற்கு அணிகலனும சேரும். உங்கள் கூட்டு மனிதர்கள் இப்போது சுமுகப் போக்கை விரும்புவா். பேதப்பட்ட பெண்கள் அல்லது கலைப் பிரிவு மனிதர்கள் மீண்டும் ஒன்று சேர்ந்து புதிய தொழில் முயற்சியை மேற்கொள்வா. இப்போது உங்கள் ஆரோக்கியமும் குடும்பம், குழந்தைகள் ஆரோக்கியத்தையும் கவனிக்கவேண்டும். மருத்துவச் செலவுகள் இடம் பெறும். புகழ்மிக்க அரசியல்வாதிகளின் சந்திப்பும் இப்போது ஏற்படும்.

**அதிர்ஷ்ட எண்கள்: 3, 8.**
**அனுகூல திக்குகள்: வடமேற்கு**
**03.08.2005 முதல் 15.09.2005 வரை**

கௌரவத்தை உயர்த்திக் கொள்ள சில செயலை செய்து பாராட்டு வாங்குவீர்கள்.பழைய விஷயங்களில் சில தாமதப் பட்டதை முடிவு செய்வதில் மற்றவர்கள் மகிழ்ச்சியும் குறிப்பிடக் இருக்கிறது. சிலருக்கு உறவு முறைப் பெண் அல்லது ஆண் காதல் தொடாபும் உண்டாகும். அவைவெகு காலமாக உள்ளத்தில் இருந்தது இப்போது உருவகம் பெற்றுவருவது இனிமையாக இருக்கும். குடும்பப் பெண்களுககு புது உடைகள் சேர்க்கை சிலருக்கு ஆபரண சேர்க்கையும் உண்டாகும்.

குடும்பத்தில் ஏற்படும் செலவுகள் இதர வெளிவட்டார செலவும் கௌரவப் பிரச்சினையாக முடியும். இரு குடும்பம் உள்ளவர்கள் மூன்றாவது மனிதர்களின் முடிவினை ஏற்க வேண்டிவரும். குழந்தைகள், மனைவி இந்த வகையில் சிறு சிறு சச்சரவுகள இடம் பெறும். தெய்வ வழிபாடு மன அமைதியை உண்டாக்கும். கலைத்துறையினர்கள் சில ஒப்பந்தம் எழுத்து வகையில் எதிர்பார்க்கும் நன்மைகள் அப்படியே ஸ்தம்பித்து நிற்கும். இதற்கு நண்பர்கள் முட்டுக் கட்டையே காரணமாக இருக்கும். சில சமயம் இவை வழக்காகவும் உருவெடுக்கலாம். மேற்குத்திக்கு மனிதர்களின் வருகை பேச்சுவகையில் திருப்தியளிக்கும். உத்தியோகப் பிரிவினர்கள் தொழிலாளர்களுக்கு மிகவும் இது வேதனையான மாதமாகும். கலைப் பிரிவு ஆண்,பெண்க஌ுக்கு மிகவும் கவனமாக இருந்தும் சிலவகையில் ஏமாற்றத்தை உண்டாக்கிவிடும். பழைய நண்பர்களைச் சந்திப்பது சற்று புதிய தெம்பு பிறக்கக்கூடும் என்றாலும் அதன் சாதக, பாதகங்களை ஏற்கவேண்டியவர் நீங்கள் தான்.

**அதிர்ஷ்ட எண்கள்:1, 3, 7**
**அனுகூல திக்கு: வடமேற்கு**

(தொடரும்)

## இன்று ஒரு தகவல்

# எல்லாம் முடியும்

ஒரு சிறு கிராமம். அங்கே இரண்டுபேர் சிறு வயது முதலே ஒன்றாக வளர்ந்தவர்கள். அந்த இரண்டு பேரில் ஒருவன் மட்டும் கொஞ்சம் வசதி படைத்தவன். சில நாட்கள் பாடசாலை போய்ப் படித்தான். அதன் பின் அந்தக் கிராமத்தை விட்டு நகரத்திற்குப் போனான். வியாபாரம் செய்தான். பணம் சேர்ந்தது. பட்டணத்தில் பங்களா கட்டிக் கொண்டு அங்கேயே தங்கிவிட்டான்.

இன்னொருவன் கிராமத்திலேயே மாடு மேய்த்துக் கொண்டு இருந்து விட்டான். பள்ளிக்கூடம் போகவில்லை. படிக்கவில்லை.அந்தக் கிராமத்தை விட்டு வெளியே எங்கும் போனதில்லை. அதனால் வெளி உலகமே தெரியாமல் வளர்ந்துவிட்டான்.

இவன் ஒருநாள் பட்டணத்திற்குப் போக வேண்டியிருந்தது. விவரம் தெரிந்த சிலரது துணையுடன் அங்கு போய்ச் சேர்ந்து விட்டான். மெதுவாக தனது பழைய நண்பனிருந்த இடத்தையும் விசாரித்துக் கண்டுபிடித்து போய் சேர்ந்தான். அவன் கட்டியிருந்த பெரிய பங்களாவைப் பார்த்து அசந்து போய் நின்று விட்டான். அவன் இவனைப் பார்த்ததும் 'வா' என்றழைத்து உள்ளே கூட்டிக் கொண்டு போனான்.

இவன் மெதுவாக உள்ளே போனான். இவனுக்குப் புரியாத சமாச்சாரங்கள் என்னென்னவோ இருந்தன அங்கே. நீ மிகவும் பெரிய ஆளாகிவிட்டாய் என்றான். "எல்லாவற்றுக்கும் நான் தான் காரணம்" என்று மிகவும் பெருமையாகச் சொன்னான் அவன். "அது சரி... சரியான களைப்பாக இருக்கிறது. வெயிலில் வந்தது ஒரு விசிறி மட்டை இருந்தால் தா" என்று கேட்டான் இவன்.

" விசிறி மட்டை எதற்கு அதுதேவை இல்லை. இதோ இப்போது காற்று வீசச் சொல்கிறேன் பார்" என்று மின்விசிறியின் பட்டனைத் தட்டிவிட்டான். அது சுழல ஆரம்பித்தது. காற்று வந்தது. இவன் ஆச்சரியமாக அண்ணாந்து பார்த்தான். " என்ன பார்க்கிறாய்.எல்லாம் என்விரல் நுனியில் இதைத் தொட்டால் போதும். அது சுற்ற ஆரம்பித்து விடும்" என்றான் அவன்.

" நீ உண்மையிலேயே பெரிய ஆள்தான். அது இருக்கட்டும். இருட்ட ஆரம்பித்து விட்டதே. ஒரு சின்ன விளக்கு அல்லது மெழுகுவர்த்தி இருந்தால் கொண்டு வா" என்றான். "அது எதற்கு வெளிச்சமும் நான் சொன்னால் வரும்" என்று கூறி ஒரு சுவிட்சைத் தட்டினான். உடனே பிரகாசமான வெளிச்சம். இவன் மிகவும் ஆச்சரியமாக அதைப் பார்த்தான்.

பட்டணத்து நண்பன் இதைக் கவனித்தான். " என்ன ஆச்சரியப்படுகிறாய்" என்று சொல்லி வானொலியைப் போட்டான். அது பாட ஆரம்பித்தது..தொலைக்காட்சியைப் போட்டான்.அதில் படம் வர ஆரம்பித்தது. " பார்த்தாயா?... என்னால் எல்லாம் முடியும். எல்லாம் என்விரல் நுனியில்" என்றான்.இந்தச் சமயத்தில் தான் அது நடந்தது.

அதாவது திடீரென்று மின்சாரம் நின்றுவிட்டது. பவர்கட் . கிராமத்து ஆளுக்கு ஒன்றும் புரியவில்லை. "ஏன் இருட்டாக்கி விட்டாய்? வெளிச்சத்தைக் கொண்டு வா" என்றான். மின்சாரம் போய்விட்டது. அதனால் விளக்கு எரியாது" என்றான் அவன். இவனுக்கு அது புரியவில்லை. சரி அப்படியென்றால் விசிறியைப் போடு" என்றான். "அதுவும் வேலை செய்யாது" என்றான்." ரேடியோவையாவது பாடவை" என்றான் அவன். " அதுவும் முடியாது "என்றான் இவன்.

"என்ன இப்படிச் சொல்கிறாய்? எல்லாம் விரல் நுனியில். என்னால் எல்லாம் முடியும். நான்தான் காரணம் என்றாய்.இப்போது அந்த நான் எங்கே போனது?" என்றான். அவன் தலையைத் தொங்கப் போட்டுவிட்டான். இன்று நம்மில் பலபேருடைய நினைப்பு இப்படித்தான் உள்ளது. அதனால் தான் அவ்வப்போது அல்லாடிக் கொண்டிருக்கிறோம்.

நமது ஆள் ஒருவன் ஆஸ்பத்திரியில் படுத்திருந்தான் . உடல் முழுவதும் கட்டு. "என்ன நடந்தது?" என்று கேட்டார் அங்கு வந்திருந்த ஒருவர். இவன் தனது விரல் நுனியைக் காட்டினான். " இதுதான் சார் காரணம்" என்றான். அவருக்கு ஒன்றுமே புரியவில்லை."என்னப்பா சொல்கிறாய்?" என்றார்.

"இந்த விரல் நுனியை எங்கள் வீட்டு சுவற்றில் வைத்தேன்.உடனே என்னை ஆஸ்பத்திரியில் கொண்டு வந்து போட்டு விட்டார்கள்" என்றான். "வீட்டுச் சுவற்றில் விரல் வைப்பது தவறா?" என்றார். "விரல் வைப்பது தவறில்லை சார். அப்படி வைக்கின்ற இடத்தில் மின்சார வயர் தொங்கிக் கொண்டிருந் தது. அதுதான் தவறு" என்றான் இவன்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# இலங்கை ஒரே தேசமாக ஒருபோதும் இருந்ததில்லை

## சட்டத்துறை விரிவுரையாளர் வி.ரி தமிழ்மாறன்

(கொழும்பு)

இலங்கை முழுவதும் ஒரே தேசமாக ஒருபோதும் இருந்ததில்லை என்பதை இப்போது சிங்கள ஆய்வாளர்களே ஒப்புக்கொள்ளத் தொடங்கியுள்ளதாக கொழும்பு பல்கலைக்கழக சட்டத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வி.ரி.தமிழ் மாறன் தெரிவித்துள்ளார்.

கொழும்பு தமிழ்ச் சங்கத்தில் நேற்று முன்தினம்இடம்பெற்ற ஊடகவியலாளரும், நாட்டுப்பற்றாளருமான ஜி.நடேசனின் நினைவஞ்சலிக் கூட்டத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே, விரிவுரையாளர் தமிழ்மாறன் இவ்வாறு அங்கு கருத்து வெளியிட்டார்.

இலங்கை ஒரே தேசமாக இருக்கக்கூடிய எல்லா வாய்ப்புக்களும் தவறவிடப்பட்டு விட்டதாக தனதுரையில் குறிப்பிட்ட வி.ரி.தமிழ்மாறன், இலங்கை ஒரே தேசமாக இருக்க முடியாமல் போனமைக்கு என்ன காரணம் என்பதற்கு நடேசனுடைய வாழ்க்கையே ஒரு உதாரணமாக அமைந்துள்ளதெனத் தெரிவித்தார்.

கொழும்பு பல்கலைக்கழகத்தில் கல்வி பயின் காலத்தில் நடேசன் இலங்கைத் தேசியத்தை வலி றுத்தி வந்த ஒருவர் என்பதை கூட்டத்தில் நினை கூர்ந்த அவர், பின்னர் நடேசனுக்கு நேர்ந்த கதியு அவ்வாறு நேர்வதற்கான பின்னணிக் காரணிகளு இலங்கை ஏன் ஒரே தேசமாக இருக்கமுடியாம போனது என்பதற்கான சிறந்த உதாரணம் என்றும் அங் குறிப்பிட்டார்.

தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இல கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் உ தலைவர் ராஜ்குமாரின் தலைமையில் ஆரம்பமா நினைவஞ்சலிக் கூட்டத்தில், சக ஊடகவியலாளரா நிக்சன், முஸ்லிம் மீடியா போரத்தின் தலைவர் அமீ மற்றும் புதிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்த திரு வுக்கரசு ஆகியோரும் உரையாற்றியிருந்தனர்.நடேசனி பாரியார், அவரது இளைய புதல்வர் உட்பட மற்றும் ப ஊடகவியலாளர்களும் இக்கூட்டத்தில் கலந்துகொ டிருந்தனர். (ற

# கண்காணிப்புக்குழு அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க நடவடிக்கை

(கொழும்பு)

போர் நிறுத்தக் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள ஸ்கன்டினேவிய அதிகாரிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்து ஜனாதிபதிக்கும், போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவருக்கும் இடையில் பேச்சுவார்த்தை ஒன்று இடம்பெறவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பேச்சுவார்த்தை இவ்வாரத்தில் இடம் பெறலாமெனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. தற்போது கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை போதுமானதாக இல்லையெனத் தெரிவித்துள்ள போர் நிறுத்தக் கண் காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட் புறாவ் ஹெவ்டே, மேலும் 20 பேரை புதிதாக இணைத் துக் கொள்வதற்கு அரசாங்கத்திடம் அனுமதி கோரியி ருப்பதையடுத்தே, அரசாங்கம் இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது.

தற்போது வடக்கு-கிழக்குப் பகுதிகளிலும், கொழும் பிலுள்ள கண்காணிப்புக் குழுவின் தலைமைச் செயலகத்திலுமாக மொத்தம் 55 அதிகாரிகளே கடமை யாற்றுவதாக போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் அரசாங்கத்துக்கு சுட்டிக்காட்டியிருந்தார்.

இதனடிப்படையிலேயே கொழும்பிலும் வடக்கு-கிழக்கிலும் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டுள்ள அதிகாரிகளின் எண்ணிக்கை அதிகரிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஜனாதிபதியுடன் இடம்பெறும் இந்தச் சந்திப்பின் பின்னர், நோர்வே செல்லவுள்ள போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ட்ரொன்ட்புறாவ் ஹெவ்டே அங்கு புதிய அதிகாரிகளுக்கான நேர்முகத் தேர்வுகளை நடாத்தவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## இராசி பலன்

02. 09. 2004 *(ஆவணி 17, வியாழக்கிழமை)*

திருதியை காலை 6.14 மணிவரை

ரேவதி முன்னிரவு 9.54 மணிவரை

இராகுகாலம் 1.35 - 3.05 மணிவரை

சுபநேரம் 7.35 - 9.05 மணிவரை

சங்கடகர சதுர்த்தி விரதம்

**மேடம்**
காரியஅலைச்சல், சுபசெலவு, சயனசுகக்குறைவு, கௌரவக்குறைவு.

**இடபம்**
நல்லவரவேற்பு, தெய்வதரிசனம், தொழில்வருமானம், எடுத்த கருமங்கள் கைகூடும்.

**மிதுனம்**
சுபநிகழ்ச்சி, கடினஉழைப்பு, நல்லசெய்தி, சகோதரர் உதவி.

**கடகம்**
ஆன்றோரால் மதிக்கப்படுதல், புதியதிட்டமிடல், வீண்பயம், கட்டுப்பாடு.

**சிங்கம்**
வீண்தொல்லை, உஷ்ணவியாதி, காரியதடங்கல், பணவிரயம்.

**கன்னி**
திடீர் பயணம், அபூர்வசந்திப்பு, கௌரவமான நிலை, பணவருவாய்.

**துலாம்**
சுகவாழ்வு, தொழில் சிந்தை, புதியவிடயம், உறவினர்சந்திப்பு.

**விருச்சிகம்**
மனக்கவலை, சொத்துப்பிணக்கு, புண்ணிய கருமங்கள், பொருள்விரயம்.

**தனுசு**
கல்வியில் ஆர்வம், அற்பர் நேசம், பயந்த சுபாவம், அதிக பிரயாசை.

**மகரம்**
இனிய அனுபவம், வாக்குமேன்மை, புதிய பொருள் சேர்க்கை, பணவசதி.

**கும்பம்**
கடினவார்த்தை, ரோகபயம், காரியதாமதம், தன விரயம்.

**மீனம்**
ஜனவசியம், சயனசுகம், தொழிலில் ஆர்வம், காரிய அனுகூலம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

# மிதிவெடியால் பாதிக்கப்பட்டோரின் நலன்கள் பூரணப்படுத்தப்படவில்லை

## யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

மிதிவெடியினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான ஆதரவு பூரணமாக இதுவரை செய்யப்படவில்லை. அக்குறையை நிவிர்த்தி செய்வதற்கு குடும்பப் புனர்வாழ்வு நிலையம் தற்போது முன்வந்துள்ளது என யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

குடும்பப் புனர்வாழ்வு நிலையம், ஐக்கிய நாடுகள் சிறுவர் பாதுகாப்பு நிதியம் ஆகியவற்றின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்படும் மிதிவெடியினால் பாதிப்புற்றோருக்கான "சமூக உளவியல் புனர்வாழ்வு" செயற்திட்டத்தின் கீழ் கூட்டப்பட்ட சமூக உளவியல் குழுக்கூட்டம் கடந்த திங்களன்று யாழ்.வலயக்கல்விப் பணிமனை முகாமைத்துவ மண்டபத்தில் நடைபெற்றது.

அச்சந்திப்பிற்குத் தலைமை தாங்கி உரையாற்றும் போதே வலயக்கல்விப் பணிப்பாளர் மேற்கண்டவாறு கூறினார். அவர் மேலும் பேசுகையில்,

"உடலில் அவயவங்களை இழந்தவர்கள் வாழ்க்கையே போய்விட்டது என எண்ணி மனத்தாக்கத்திற்கு உள்ளாகித் தாழ்வு மனப்பாங்குடன் வாழ்கின்றனர். இவர்களை உளவளத்துணை மூலம் மனவலுவூட்டி, மனப்பாங்கில் மாற்றம் செய்து சமூக வாழ்வுக்குத் திசை திருப்பும் பணியை குடும்பப் புனர்வாழ்வு நிலையம் செய்து வருகின்றது" எனக் கூறினார்.

இக்கூட்டத்தில் உரையாற்றிய குடும்பப் புனர்வாழ்வு நிலைய, யுனிசெவ் செயற்திட்டத்திற்கான மாவட்ட இணைப்பாளர் எஸ்.சி.எஸ்.சிதம்பரநாதன்,

இன்றைய கூட்டம் அரச அரசசார்பற்ற நிறுவனங்களை ஒன்றிணைத்து வலைப்பின்னலாக மிதிவெடியினால் பாதிப்புற்றோருக்கு ஜீவனோபாயத்திற்கான ஆதரவு, குழந்தைகளின் கல்வி வளர்ச்சிக்கான உதவி போன்றவற்றிற்கு யார் யார் எந்தவகையில் பங்களிப்பு செய்யலாம் என்று தீர்மானிக்கின்ற ஒரு களமாக அமையும் எனக் கூறினார்.

இக்கூட்டத்தில் வலிகாமம் வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி.றெ.இருதயநாதன் மற்றும் யுனிசெவ் பிரதிநிதிகளுடன் அரச அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர். (ற-16)

# நல்லூரான் திருவடிக்கு



பதின்மூன்றாம் திருவிழா

## அன்புத் தெய்வம்

இரா :கரகரப்பிரியா தாளம்:ஆதி

பல்லவி

அஞ்சுவென் நெனக்கபயம் அளித்திடும் தெய்வம்
அறிவுக்குள் அறிவாகி ஆகிவிடும் தெய்வம்
(அஞ்ச)

அனுபல்லவி

தஞ்சமென வந்தோரைத் தாங்கிடுந் தெய்வம்
சரவண பவாவெனும் சண்முகனாம் தெய்வம்
(அஞ்ச)

சரணம்

நஞ்சுடை கண்டனநல் ஞானத் தெய்வம்
நல்லூரில் நடனமிடு நல்ல தெய்வம்
குஞ்சரியாள் வள்ளியுடன் குலவும் தெய்வம்
குமரகுரு பரனாக கொண்ட தெய்வம்
வஞ்சனைபொய் காமாதி மாய்க்குத் தெய்வம்
(அஞ்ச)

சஞ்சிதமாம் மிஞ்சுவினை தகர்க்குந் தெய்வம்
அஞ்சினோ டதோமுகமாய் ஆன தெய்வம்
அகத்தியர்குத் தமிழுரைத்த அன்புத் தெய்வம்
(அஞ்ச)

பண்டிதர் சி. கா. சேந்தன்

## எழிசையாய் இசைப்பயனாய்

எழிசையாய் இசைப் பயனாய்
எழில்கொஞ்சும் வித் தகனாய்
நாளெல்லாம் எமக் கருளும்
நல்லைநகர் நா யகனே!

தோள்கொடுத்து எமைத் தாங்கி
தொல்லைதனை வே களைந்து
வாழ்வாங்கு வாழ வைக்கும்
வடிவேலின் வள மென்னே!

நல்லூர் எனுந் தோறும்
நாவே இனிக் குதையா
கல்மனமே கரைந் துருகிக்
கண்கள் பனிக் குதையா!

கூத்தாடி வி.சி.குஞ்சிதபாதம்

## பக்தியுடன் பாதங்கள் பணிந்தேன்

கோலமயில் ஆடுதலைக் கண்டேன்
கோவில் மணி ஒலித்திடவும் கேட்டேன்
வேலவனின் திருமுகத்தைப் பார்த்தேன்
வெற்றி தரும் பேரொலியைக் கண்டேன்
மால்மருகன் நல்லை நகர்க் குமரன்
மனக்குறைகள் நீக்கிடுவான் என்றே
பாலகுகன் புகழ்தன்னைப் பாடி
பக்தியுடன் அவன் பாதங்கள் பணிந்தேன்

மு.முத்துக்குமார்

## சங்கிலியனின் தலைவனே!

வேடர்குல வள்ளியின் துணைவனே!
வேந்தன் சங்கிலியனின் தலைவனே!
மாப்பான வம்சத்தின் தலைவனே
மாதவனின் மருகனே வெற்றி வேலனே!
உன்னைத் தொழுவேரைக் காப்பவனே!
உன்னாமம் ஒலித்ததும் ஓடோடி வருபவனே!

நயினை புத்தகாயா
கு.உமாமகேஸ்வரன்

# யர்ழ்ப்பாணம் கல்வி வலய ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்

**பார்த்தெழுதுதல் தரம் III**

1. எம்.பவித்ரா - யாழ்.இந்துஆரம்பப் பாடசாலை
2. எஸ்.உமையாள் - சென்.ஜோன் பொஸ்கோ வித்தி.
3. எஸ்.கீர்த்திகா - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

**தரம் IV**

1. எஸ்.பெஞ்சமின் - சென்.ஜோன் பொஸ்கோ வித்தி.
2. எம்.சோபிதன் - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை
3. ஆர்.அலெக்ஸன் - யாழ்.மத்திய கல்லூரி

**தரம் V**

1. பி.மாதுமை - சென்.ஜோன் பொஸ்கோ வித்தி.
2. என்.கௌஷனா - சென்.ஜோன் பொஸ்கோ வித்தி.
3. ஜி.பிரியங்கா - யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை

**தரம் VI**

1. ரி.தாரணி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2. எஸ்.சுமிதா - வேம்படி மகளிர் கல்லூரி
3. ரி.திவ்யா - கொக்குவில் இந்துக்கல்லூரி

**தரம் VII**

1. ரி.கீர்த்திகா - வேம்படி மகளிர் கல்லூரி
2. வி.அஜலக்ஷன் - யாழ்.இந்துக்கல்லூரி
3. ரி.தீபஷாலினி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி

**தரம் VIII**

1. எஸ்.வைஷ்ணவி - வேம்படி மகளிர் கல்லூரி
2. எம்.லஷ்சனா - கொழும்புத்துறை இந்து மகா வித்தி.
3. ரி.ஜெனோலிஸா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி

**தரம் IX**

1. பி.ஷெரின் பொஸ்ரினா - திருக்குடும்ப கன்னியர் மடம்
2. ரி.பிரசாந்தினி - கரந்தன் ராமுப்பிள்ளை வித்தி.
3. பி.சிவரூபினி - வேம்படி மகளிர் கல்லூரி

**தரம் X**

1. ஏ.வருஜிசா - வேம்படி மகளிர் கல்லூரி
2. எஸ்.சுரேஷனா - கொக்குவில் இந்துக்கல்லூரி
3. எம்.தர்ஷிகா - ஆவரங்கால் நடராஜ இரமலிங்க வித்தி.

**தரம் XI,**

1. எஸ்.காருண்யா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2. எஸ்.துஷாந்தி - யாழ். இந்து மகளிர் கல்லூரி
3. எஸ்.சிவதர்ஷினி - வேம்படி மகளிர் கல்லூரி

**தரம் XII**

1. பி.டிலோஷன் - சென்பற்றிக்ஸ் கல்லூரி
2. ஜே.ஷசீதா - யாழ். இந்து மகளிர் கல்லூரி
3. எஸ்.திருமகள் - வேம்படி மகளிர் கல்லூரி

**தரம் XIII**

1. ஏ.ரோஷினி துஷாரா - திருக்குடும்ப கன்னியர் மடம்
2. ஆர்.யாழினி - யாழ். இந்து மகளிர் கல்லூரி
3. எம்.மேரிநிரோஷினி - வேம்படி மகளிர் கல்லூரி

**சொல்வதெழுதுதல் தரம் VI**

1. எஸ்.ஆரபி - திருக்குடும்ப கன்னியர் மடம்
2. எக்ஸ்.லிஷி இலவிதா - திருக்குடும்ப கன்னியர் மடம்
3. வி.கோகுலன் - யாழ்.இந்துக்கல்லூரி

**தரம் VII**

1. எஸ்.சிவாஜினி - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2. என்.வாஹினி - வேம்படி மகளிர் கல்லூரி
3. என்.பிரணவரூபன் - யாழ்.இந்துக்கல்லூரி

**தரம் VIII**

1. எம்.ஜோன் சேவியர் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி
2. கே.அஞ்சுகன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி
3. எஸ்.சோபிகாந்தன் - யாழ்.இந்துக்கல்லூரி

**தரம் IX**

1. எம்.அறிவரசி - வேம்படி மகளிர் கல்லூரி
2. எஸ்.லக்ஷிகா - வேம்படி மகளிர் கல்லூரி
3. ரி.கஜானி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

**தரம் X**

1. ஆர்.தர்ஷனா - வேம்படி மகளிர் கல்லூரி
2. எஸ்.ஜனனி - வேம்படி மகளிர் கல்லூரி

**தரம் XI**

1. எஸ்.விதுஷன் - யாழ்.இந்துக் கல்லூரி
2. பி.ஷாலினி - வேம்படி மகளிர் கல்லூரி
3 எஸ்.ரம்யா - கொக்குவில் இந்துக்கல்லூரி

**தரம் XII**

1. எஸ்.பிரியங்கா - வேம்படி மகளிர் கல்லூரி
2. கே.தர்ஷனா - வேம்படி மகளிர் கல்லூரி
3. கே.அபிரா - யாழ்.இந்து மகளிர் கல்லூரி

**தரம் XII**

1. ஆர்.வித்தியா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2. பி.நொய்லின் ஜீவிதா - வேம்படி மகளிர் கல்லூரி
3. வி.அபர்ணா - கொக்குவில் இந்துக்கல்லூரி

**ஆக்கத்திறன் தரம் VI**

1. எச்.எஸ்.ராஜாராம் - சென்ஜோன்ஸ் கல்லூரி
2. எம்.முகுந்தன் - வேம்படி மகளிர் கல்லூரி
3. வி.விதுஷன் - யாழ்.இந்துக்கல்லூரி

**தரம் VII**

1. கே.தனுஷியா - வேம்படி மகளிர் கல்லூரி
2. ஏ.அர்ச்சனா - வேம்படி மகளிர் கல்லூரி
3. என்.சதீஸ்காந் - யாழ்.இந்துக்கல்லூரி

**தரம் VIII**

1. வி.நிஷாந்திகா - வேம்படி மகளிர் கல்லூரி
2. கே.அஞ்சுகன் - சென்.பற்றிக்ஸ் கல்லூரி
3. என்.திருத்தனிகன் - யாழ்.இந்துக்கல்லூரி

**தரம் IX**

1. கே.சர்ஜனா - சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2. கே.ஹர்சன் - யாழ்.இந்துக்கல்லூரி
3. ரி.திவான் - சென்ஜோன்ஸ் கல்லூரி

**தரம் X**

1. ஆர்.தர்ஷனா - வேம்படி மகளிர் கல்லூரி
2. எம்.சிறிஸ்பினி - திருக்கும்ப கன்னியர் மடம்
3. எஸ்.மைஜந்தி - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.

**தரம் XI**

1. எஸ்.விதுஷன் - யாழ். இந்துக்கல்லூரி
2. எஸ்.நிஷாந்தன் - யாழ். இந்துக்கல்லூரி
3. ரி.சஜீவன் - சென்.ஜோன்ஸ் கல்லூரி

**தரம் XII**

1. வை.அபிராமி - வேம்படி மகளிர் கல்லூரி
2. வை.பிரதீபன் - சென்.ஜோன்ஸ் கல்லூரி
3. கே.அபிரா - யாழ். இந்துமகளிர் கல்லூரி

(தொடரும்)


**சிறுவிளம்பரம்**

**நல்லூர் பல.நோ.கூ.சங்கம்**

மேற்படி பல நோ.கூ.சங்க தலைமைக் காரியாலயத்திற்கு மை பூசுவதற்கு கேள்வி கோரப்படுகிறது. விபரங்கட்கு 08.09.2004ஆம் திகதிக்கு முன் சங்க காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(C/436)


## கட்டட நிர்மாண வேலைகள் பூர்த்தி

(மருதங்கேணி)

மருதங்கேணி கிராமிய வைத்திய சாலையின் கட்டட நிர்மான வேலைகள் யாவும் பூர்த்தியடைந்த நிலையில் ஒப்பந்தகாரர்களினால் நிக்கொட் நிறுவனத்திடம் கையளிக்கப்படவுள்ளது.

இவ் வைத்தியசாலை 170இலட்சம் ரூபா நிதி செலவில் நிக்கொட் நிறுவனத்தால் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது.

நிக்கொட் பிரதிநிதிகள் சுகாதார திணைக்களத்திடம் இதனைக் கையளித்தபின் வைத்தியசாலை திறந்து வைக்கப்படவுள்ளது.

இவ் வைத்தியசாலை தற்சமயம் தனியார் வீட்டிலேயே இயங்கி வருகிறது. இருப்பினும் இங்கு வெளிநோயாளர் பிரிவு மாத்திரமே இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(ற-35)

## வீதி சேதம் பயணிகள் சிரமம்

(மாதகல்)

வடலியடைப்பு மதவடியிலுள்ள குறுக்கு வீதியொன்று பத்து வருடங்களுக்கு மேலாக திருத்தப்படாமல் இருந்துவருகிறது.

ஒரு பகுதி திருத்தப்பட்ட நிலையிலும் மிகுதி திருத்தப்படாத நிலையிலும் காணப்படும் இவ் வீதி சங்கானை மற்றும் பிரான்பற்று போன்ற இடங்களுக்குச் செல்வதற்கு பாவிக்கப்பட்டுவருகிறது.

மாரிகாலத்தில் இவ் வீதியால் பயணிக்க முடியாத சூழ்நிலை உருவாகுவதாக பயணிகள் கவலை தெரிவித்துள்ளதுடன், வீதியில் வடிந்து வரும் வெள்ளம் தேங்கி நின்று பலத்த அசௌகரியங்களையும் ஏற்படுத்துவதாக மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(ற-24)

## பயணிகள் கவனத்துக்கு

(கொழும்பு)

அதிகரிக்கப்பட்டுள்ள புதிய பஸ் கட்டண முறைகள் நேற்றுமுதல் அமுலுக்கு வந்துள்ளதாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் அமல்குமாரகே அறிவித்துள்ளார்.

எனவே மேற்படி கட்டண முறைகளினால் மக்கள் ஏதாவது சிரமங்களை எதிர்நோக்கினால், அல்லது இந்தக்கட்டண அதிகரிப்புக்கு மேலதிக பணத்தை பஸ்நடத்துநர்கள் அறவிட்டால் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் 2595555 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு பொதுமக்கள் தொடர்புகொண்டு முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ற-கு.61)

## பொதுக்கூட்டம்

(பொன்னாலை)

தொல்புரம் மேற்கு மன்னதோட்டம் ஜெகஜோதி அம்பாள் ஆலய பரிபாலனசபை பொதுக்கூட்டம் எதிர்வரும் 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.4.00மணிக்கு ஆலய மண்டபத்தில் ச.வேலாயுதம் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலி.மேற்கு பிரதேச செயலர் சீ.ஏ.மோகன்றாஸ், கலாசார உத்தியோகத்தர் மற்றும் கிராம அலுவலர் ஆகியோர் இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

அத்தருணம் சபையின் அங்கத்தவர்கள் அனைவரையும் இச் கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ற-49)

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2004

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2004

**தமிழ்மொழியும் இலக்கியமும் I**

**நேரம் - 1 மணித்தியாலம்**

ஆக்கம் : ம. இரங்கநாதன்
(யா/ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தியாலயம்)

**பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்திற் காணப் படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடை தருக.**

**(I)**

(01) "பொறுப்போம் பொறைபோம் நிறைபோம் எந்தன்..........." எனும் பாடலடியின் **பொறை** என்பதன் ஒத்த கருத்துப்பதம்.
1. அழகு 2. பொறுமை 3. பெருமை 4. கொடை

(02) "எருதுகள் உற்சாகத்தோடு முதலில் கொஞ்சத் தூரம் ஓடின" இதில் வந்த **உற்சாகம்** என்பதன் ஒத்த கருத்துப்பதம்
1. விரைவு 2. சுறுசுறுப்பு 3. கதி 4. நிதானம்

(03) "வல்லியும் மகனும் அந்த மறையவன் மனையில................" என வரும் பாடலடியில் வந்த **மறையவன்** என்பதன் எதிர்பாற்சொல்
1. மறைச்சி 2. மறையவள் 3. மறையள் 4. மறையவி

(04) "முதுகுக்குப் பின்னால் பாக்கியத்தின் குரல் மெதுவாகக் கேட்கின் றது" இதில் **மெதுவாக** என்பதன் எதிர்ப்பதம்.
1. சாதுவாக 2. பலமாக 3. கணீரென 4. விரைவாக

(05) "இருஞ் செவி மூக்கினோடும் ஆர்ந்த நாள் வந்திலாதான் இனிச்செய் யும் ஆண்மை உண்டோ' இதில் வந்த **ஆண்மை** என்பதனை எதிர்ப்பதம்.
1. வீரம் 2. பெண்மை 3. மேன்மை 4. மென்மை

**(II) புள்ளிக் கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.**

(06) அவன்................வாங்கிய கடனை இன்னும் திருப்பித் தரவில்லை.
1. கைமாத்தாக 2. கைமாறாக 3. கைமாற்றாக 4. கைம்மாத்தாக

(07) இன்று வெகுசனத் தொடர்பு...............உலகம் சுருங்கி விட்டது.
1. கருவிகளால் 2. ஊடகங்களினால்
3. பொறிகளினால் 4. உபகரணங்களினால்

(08) கொழும்பு Super Market முன்பாக அவ்விபத்து ஏற்பட்டது.இதில் வந்த **Super Market** என்பதன் தமிழ் வடிவம்.
1. நவீன சந்தை 2. சிறப்பங்காடி 3.அல்லங்காடி 4. பிரதான சந்தை

(09) கூட்டத்தின் ஆரம்பத்தில் தலைவரால் கூறப்படுவது............எனப்படும்.
1. முன்னுரை 2. தலைமையுரை 3. அறிமுகவுரை 4. பேருரை

(10) ஆறுகள் கடலோடு சேர்வதை.............. என்றுங் கூறுவர்.
1. கலத்தல் 2. சங்கமித்தல் 3. அடைதல் 4. இணைதல்

**(III) பின்வரும் வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.**

(11) இல்லறம் துறவறம் என்பதை ஈரறம் என்பதுபோல அனனை,பிதா ஆகிய இருவரையும் குறிக்கும் ஒருசொல்.
1. இருவர் 2. இருகுரவர் 3. தாய்தந்தை 4. குடும்பம்

(12) யுத்தம் செய்யப் புறப்பட்ட அரசன் தன் படைகளுடன் தங்குமிடம்.
1. அந்தப்புரம் 2. பாசறை 3. அகதிமுகாம் 4. ஆலர்சாலை

(13) மகாபாரதத்தை தமிழில் எழுதியவர்.
1. கம்பர் 2. வில்லிபுத்தூராழ்வார் 3. சேக்ஸ்பியர் 4. இளங்கோ

(14) ஒருவன் தன்னைப்பற்றித் தானே கூறும் வரலாறு.
1. வாழ்க்கைவரலாறு 2. சுயசரிதை 3. நாவல் 4. விமர்சனம்

(15) பிணங்களை அடக்கம் செய்யும் இடம்.
1. மண்மேடு 2. இடுகாடு 3. சுடுகாடு 4. சவச்சாலை

**(IV) பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

(16) இருப்பதை வைத்து திருப்திப்படாமல் பேராசைப்பட்டு ஏமாந்து போவதைக் குறிக்கும் ஒரு முதுமொழி.
1. உள்ளங்கை நெல்லிக்கனி போல
